சுருக்கம்

பள்ளிக்கல்வி – சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு W.A.(MD)Nos. 76, 225, 341 of 2019 , 1612, 1076, 1093, 1461, 1473 and 1531 of 2018–ல் 09.04.2019-ம் நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் – அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை / சிறுபான்மையற்ற தொடக்க / நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது தொடர்பான – நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது

பள்ளிக் கல்வி (தொக.2(1))த் துறை

அரசாணை (நிலை) எண். 165, நாள். 17.09.2019.

திருவள்ளுவராண்டு–2050
விகாரி வருடம், ஆவணி 31

படிக்கப்பட்டவை:–

1. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு W.A.(MD)Nos. 76, 225, 341 of 2019 , 1612, 1076, 1093, 1461, 1473 and 1531 of 2018 தீர்ப்பாணை, நாள் 09.04.2019.
2. தொடக்கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 36009/எச்/2011, நாள் 07.06.2019 மற்றும் 02.08.2019.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 34116/டி1/இ4/2013, நாள் 18.07.2019 மற்றும் 02.08.2019.

------

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பாணையில், தூத்துக்குடி, மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் திருமதி. இருதய அமலி மற்றும் எட்டு நபர்களால் பணி நியமன ஒப்புதல் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகள் மீது அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு W.A.(MD)Nos. 76, 225, 341 of 2019, 1612, 1076, 1093, 1461, 1473 and 1531 of 2018-ல், 09.04.2019ல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தீர்ப்பாணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

"(ii)..... There shall not be any fresh appointment from today in Private Aided Schools, till surplus teachers in other schools coming under the same Management are exhausted;

(iii) The Government shall not approve any appointment made by the Private Aided Schools, till the surplus teachers in the schools coming under the same Management are exhausted';

(iv) Insofar as the matters in which the issues have been decided finally either by the learned Single Judge or the Division Bench, the appellants are not at liberty to reopen the issue;

(v) There is no prohibition for approval of teachers, where concerned teachers or management obtained orders from this Court which reached finality for grant of approval

(vi) In case, an appeal or review has been preferred as on date, it is open to the appellants to contest the cases on merits;

(vii) Wherever, there is no dispute with regard to existence of surplus teachers, it is open to the appellants to deploy those teachers, wherever, it is required viz., in other aided schools.

(viii) In cases, where the minority school is a Single School and there is no question of getting surplus teachers from other schools in the same Management, it is open to the school authorities to approach the Educational Authority well in advance, so that, the Educational Authority will be able to deploy the eligible teachers. Such deployment of eligible teachers from any other school should satisfy the eligibility criteria as prescribed by the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973……."

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தொடக்கக்கல்வி இயக்குநர், உபரி ஆசிரியர்கள் பணிநிரவல் குறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேல்முறையீட்டு வழக்குகள் WA(MD) Nos76 & 225 etc batch cases–ன்மீது 09.04.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணையினை செயல்படுத்துவது தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்:-

i. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 பிரிவு 25(1) னைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 231, பள்ளிக்கல்வித்துறை, நாள்.11.08.2010ன்படியும், அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக்கல்வித்துறை, நாள்.18.05.2018ல் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், தொடக்கக்கல்வி இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிதியுதவி பெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதியில் உள்ளவாறு மாணவர்கள் எண்ணிக்கையினை கணக்கில் கொண்டு ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்து அதற்கான ஆணைகள் சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரால் வழங்கப்பட்டு வருகின்றன.

ii. இவ்வாறு ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்படும் போது ஆசிரியரின்றி உபரி மற்றும் ஆசிரியருடன் உபரி பணியிடங்கள் கண்டறியப்படுகின்றன. ஆசிரியரின்றி உபரி எனக் கண்டறியப்படும் பணியிடங்களை பொதுத் தொகுப்பிற்கு சரண் செய்யப்படுகின்றன. ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்படும் பணியிடங்களால் அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுவதோடு, இதனைச் சுட்டிக்காட்டி பல்வேறு தணிக்கைத் தடைகள் மாநிலக் கணக்காயரால் எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது.

iii. கூட்டு மேலாண்மைப் பள்ளிகளில், அம்மேலாண்மையின் கீழ் உள்ள பள்ளிகளில் உபரி ஆசிரியர் பணியிடங்கள் உள்ள நிலையில், அந்த உபரி ஆசிரியரைக் கொண்டு தகுதியான காலிப்பணியிடங்களை நிரப்பப்படாமல், நேரடி நியமனம் மூலம் புதிய ஆசிரியர்கள் நிர்வாகத்தால் நியமனம் செய்யப்படுவதோடு அவ்வாசிரியர்களுக்கு நியமன ஒப்புதல் கோரி வழக்குத் தொடர்ந்து அவ்வழக்கில் அவர்களுக்கு சாதகமான தீர்ப்பாணை பெறுகின்றனர். மேலும், தனிமேலாண்மையாக செயல்படும் நிதியுதவி பெறும் தொடக்க / நடுநிலைப்பள்ளிகளில் ஏற்படும் காலிப்பணியிடங்களை, அவ்வொன்றியம் / அக்கல்வி மாவட்டம் / மாவட்டம் அளவில் உள்ள உபரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படாமல், நேரடியாக நியமனம் செய்யப்படும் சூழலும் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்படுகிறது. எனவே இதன் மூலம் ஏற்கனவே உபரியாக பணிபுரிந்து வரும் ஆசிரியருக்கு ஊதியமும், புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியருக்குண்டான ஊதியமும் பெற்று வழங்கும் நிலை ஏற்படுவதால் அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது எனவும் தெரிவித்து, மேற்கண்ட விவரங்களுடன் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்து உரிய ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், இந்நேர்வு தொடர்பாக, பள்ளிக்கல்வி இயக்குநர் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

i. பள்ளிக்கல்வித்துறையின்கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் அந்தந்த நிர்வாகத்தால் ஆசிரியர் நியமனங்கள் ஒவ்வொரு ஆண்டும் 01.08 நிலவரப்படியான மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 525, பள்ளிக்கல்வித்துறை, நாள் 29.12.1997–ன்படி பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை தகுதியான பணியிடங்களை நிர்ணயம் செய்து அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் பணியாளர் நிர்ணய ஆணை வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி பிரிவு 19 மற்றும் 25–ல் தொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 6 முதல் 8ம் வகுப்பு வரை மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் தகுதியான பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்படுகிறது.

ii. மேற்கண்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட விகிதாச்சாரம் அடிப்படையில் ஆசிரியர்களின் எண்ணிக்கையினை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களால் கண்டறியப்பட்ட ஆசிரியருடன் கூடிய உபரியாக உள்ள பணியிடங்களை அரசாணை (நிலை) எண். 1289, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, நாள் 16.06.1982–ன்படி கூடுதல் தேவையுள்ள பள்ளிக்கு வருவாய் மாவட்டத்திற்குள் பணிநிரவல் செய்ய சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலருக்கும் நிரப்ப இயலாமல் உள்ள ஆசிரியருடன் கூடிய உபரியாக உள்ள பணியிடத்தினை மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கு மாறுதல் அளிக்க பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(இடைநிலைக்கல்வி) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியரின்றி உபரியாக உள்ள காலிப் பணியிடங்களை இயக்குநரின் பொது தொகுப்பிற்கு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

iii. அரசுக் கடித (நிலை) எண். 163, நாள் 13.06.2000–ன்படி ஒரே நிர்வாகத்தின்கீழ் இயங்கும் பள்ளிகளில் உபரிப் பணியிடங்கள் (ஆசிரியருடன் கூடிய பணியிடங்கள் மற்றும் காலிப் பணியிடங்கள்) இருப்பின் அதே நிர்வாகத்தின்கீழ் இயங்கும் கூடுதல் பணியிடம் தேவைப்படும் பள்ளிகளுக்கு முதலில் ஆசிரியருடன் கூடிய பணியிடங்கள் மாற்றம் செய்யப்படவேண்டும். அதன் பின்னரும் கூடுதல் பணியிடம் தேவையிருப்பின் காலி உபரிப் பணியிடங்கள் மாற்றம் செய்யப்படவேண்டும். பள்ளிகளுக்கு மாற்றம் செய்வதால் அந்த உபரி ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கப்படும். உபரிப் பணியிடங்கள் மாற்றம் செய்யும்பொழுது ஆசிரியர்களுடன் கூடிய பணியிடங்களே வழங்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேல்முறையீட்டு வழக்கு எண். 76,225 மற்றும் இதர தொகுப்பு வழக்குகளில் 09.04.2019–ம் நாளிட்ட தீர்ப்பாணையில், காலிப்பணியிடம் நிரப்பும்போது உபரியாக உள்ள ஆசிரியருடன் பணியிடத்தினை கொண்டு நிரப்பிடவேண்டும். புதிய நியமனங்கள் ஏதும் செய்யக்கூடாத எனவும், அவ்வாறு நியமனங்கள் மேற்கொண்டால் அதற்கு ஒப்புதல் வழங்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

v. கூட்டு மேலாண்மை நிர்வாகத்தால் இரண்டு அலகுகளிலும் தொடக்கக்கல்வி மற்றும் பள்ளிக்கல்வித்துறையில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ளடக்கிய பள்ளியினை ஒருங்கிணைத்த நிர்வகிக்கும் நிலையில் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடும்போது நிர்வாகத்தின்கீழ் உள்ள இரண்டு அலகிலும் ஒத்த நிலையில் உள்ள உபரியாக கருதப்பட்ட ஆசிரியருடன் கூடிய உபரி பணியிடங்களை கொண்டு நிரப்பிடுமாறு கூட்டு மேலாண்மை நிர்வாகத்திற்கு தெரிவிக்கலாம். இதனால் இந்நிர்வாகத்தின்கீழ் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பிட வழிவகையேற்படும். மேலும் காலிப் பணியிடங்கள் உபரி ஆசிரியர் பணியிடங்களை கொண்டு நிரப்பிட வேண்டும் எனவும் புதிய நியமனங்கள் மேற்கொள்ளும் முன்

இதனை உறுதி செய்து கொள்ளுமாறு கூட்டு மேலாண்மைக்கு தெரிவிக்கலாம். தனி மேலாண்மையாக செயல்படும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையற்ற பள்ளிகளில் தகுதியுள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பும்போது அந்தந்த முதன்மைக்கல்வி அலுவலரின் கீழ்வுள்ள ஆசிரியருடன் கூடிய உபரிப் பணியிடங்கள் கொண்டு நிரப்பிடவேண்டும் என்றும் தெரிவித்து, பணிநிரவல் சார்ந்த வழிமுறைகளை பின்பற்ற தக்க ஆணையை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதியும், உபரி ஆசிரியர்களால் அரசுக்கு ஏற்பட்டு வரும் நிதியிழப்பினை தவிர்த்திடும் பொருட்டும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு W.A.(MD)Nos. 76, 225, 341 of 2019 , 1612, 1076, 1093, 1461, 1473 and 1531 of 2018–ல் 09.04.2019-ம் நாளிட்ட நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை / சிறுபான்மையற்ற தொடக்க / நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது குறித்து கீழ்க்கண்ட நெறிமுறைகளை பின்பற்றி உரிய நடவடிக்கை எடுக்க தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோருக்கு அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(i) ஒவ்வொரு தனிமேலாண்மையும் பள்ளியும் ஒரு அலகாகவும், ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகளைக் கொண்டு கூட்டு மேலாண்மையாக செயல்படும் பள்ளிகள் ஒரு அலகாகவும் கருதப்படுகிறது.

(ii) அரசாணை (நிலை) எண்.525, பள்ளிக்கல்வித்துறை, நாள் 29.12.1997 மற்றும் அரசாணை (நிலை) எண்.231, பள்ளிக்கல்வித்துறை, நாள் 11.08.2010–ன்படி ஒவ்வொரு பள்ளிக்கும் அரசால் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை பணியாளர் நிர்ணயம் செய்யப்படும்போது, ஒவ்வொரு ஆண்டும் 01.08 தேதிய நிலவரப்படி அப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்படுவதை இப்பள்ளிகளுக்கு தொடர்ந்து கடைபிடிக்கலாம்.

(iii) இதனடிப்படையில் பணியாளர் நிர்ணயம் செய்யும் போது கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.

a. பணியாளர் நிர்ணயம் செய்யப்படும்போது 1991–1992க்கு முன்னர் அப்பள்ளிக்கு அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் தற்போதைய மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் பணியிடங்கள், இதில் எது குறைவோ, அதனையே அப்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்டு பணியாளர் நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட வேண்டும்.

b. நடுநிலைப் பள்ளிகளை பொறுத்தவரை ஆசிரியர் பணியிடம் நிர்ணயம் செய்யப்படும்போது, கீழ்நிலை வகுப்புகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடம் தேவை இருந்து, அதற்கு அடுத்த பட்டதாரி ஆசிரியர் பதவியில் உபரியாக ஆசிரியர்கள் பணிபுரியும் நிலை இருப்பின், அவ் உபரி ஆசிரியர்களை கீழ்நிலை வகுப்புகளின் பணியாளர் நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

c. பணியாளர் நிர்ணயம் செய்யப்படும்போது, மேல்நிலை வகுப்புகளில் பணியிடம் தேவை இருந்து, இம்மேல்நிலைப் பதவியின் அடுத்த கீழ்நிலைப் பதவியில், மேல்நிலைப் பதவிக்கான கல்வித் தகுதியுடன் உபரியாக ஆசிரியர்கள் பணிபுரியும் நிலை இருப்பின், அவ் உபரி ஆசிரியர்கள் மேல்நிலை வகுப்புகளின் பணியாளர் நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

d. கீழ்நிலை வகுப்புகளில் பணியிடம் தேவை இருந்து, இப்பதவிக்கு அதற்கடுத்த மேல்நிலைப் பதவியில் உபரியாக ஆசிரியர்கள் இருப்பின் இந்த உபரி ஆசிரியர்களை கீழ்நிலை வகுப்புகளின் பணியாளர் நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

(iv) நிதியுதவி பெறும் சிறுபான்மை / சிறுபான்மையற்ற தொடக்க / நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஒய்வு பெறும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம் வழங்குவது குறித்தும், உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது குறித்தும் ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து அரசாணை (நிலை) எண். 261, பள்ளிக்கல்வி (பக5(2))த் துறை, நாள்.20.12.2018ன்படி அரசால் ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்பற்றலாம்.

(v) ஒவ்வொரு கூட்டு மேலாண்மையும் ஒரு அலகாக கருதப்படுவதால், அக்கூட்டு மேலாண்மையின் கீழ் செயல்படும் நிதியுதவி பெறும் தொடக்க/ நடுநிலை/ உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள் ஆகிய அனைத்து வகை பள்ளிகளிலும், பள்ளி வாரியாக மேற்கூறியவாறு பணியாளர் நிர்ணயம் செய்யப்படல் வேண்டும். அவ்வாறு பள்ளி வாரியாகப் பணியாளர் நிர்ணயம் செய்யப்பட்டதைத் தொகுத்து கூட்டு மேலாண்மைக்குரிய பெருமொத்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதன்படி ஒவ்வொரு கூட்டு மேலாண்மையிலும் ஏற்படும் தகுதியான காலிப்பணியிடத்திற்கு, இம்மேலாண்மையில் உபரியாகப் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களை பணிநிரவல் மூலமாக அம்மேலாண்மையே நியமனம் செய்திடல் வேண்டும்.

(vi) இதன்பின்னர், ஒவ்வொரு கூட்டு மேலாண்மை மற்றும் இதர மேலாண்மைகளிலும் உபரியாகப் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் பட்டியலைப் பதவி வாரியாக மாவட்ட அளவில் தொகுத்து, மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பதவி வாரியாக உபரி ஆசிரியர் பட்டியல் பேணப்படல் வேண்டும்.

(vii) ஒவ்வொரு தனி மேலாண்மைப் பள்ளியும் ஒரு அலகாக கருதப்படுவதால், இத் தனி மேலாண்மைப் பள்ளிகளில் ஏற்படும் நிரப்பத் தகுந்த காலிப் பணியிடங்களை மேற்கண்டவாறு மாவட்ட அளவில் முதன்மைக்கல்வி அலுவலகத்தில் பேணப்பட்டு வரும் உபரி ஆசிரியர் பட்டியலிலிருந்து, பிற உதவி பெறும் பள்ளியில் உள்ள ஆசிரியர்களை மாற்றுப்பணி மூலம் பணிபுரிய அனுமதிக்கலாம். மாற்றுப் பணி மூலமாக அனைத்து உபரி ஆசிரியர்களையும் உரிய பணியிடங்களில் நிரப்பப்பட்ட பின்னர், மீதமுள்ள நிரப்ப தகுந்த காலிப் பணியிடங்களை நிரப்பிக் கொள்ள முதன்மைக் கல்வி அலுவலரால் ஆணையிடப்படவேண்டும். பணிபுரிந்த பள்ளியில் மாணவர் சேர்க்கை அதிகரித்து உபரி இல்லாத நிலை ஏற்படும் போது மாற்றுப் பணியில் சென்றுள்ள ஆசிரியர்களை மீண்டும் அதே பள்ளியில் பணியமர்த்தலாம்.

(viii) மாற்றுப் பணி மூலம் நியமனம் செய்யப்படும் ஆசிரியர் பணியேற்கும் அலகில் இளையோராக பணிபுரியச் சம்மதம் தெரிவித்தால் மட்டுமே, ஒரு கூட்டு மேலாண்மையிலிருந்து மற்றொரு கூட்டு மேலாண்மைக்கோ அல்லது ஒரு கூட்டு மேலாண்மையிலிருந்து தனி மேலாண்மைக்கோ அல்லது ஒரு தனிமேலாண்மையிலிருந்து கூட்டு மேலாண்மைக்கோ ஆசிரியர் பணிநிரவல் வாயிலாக நியமனம் செய்யப்படலாம்.

(ix) உதவி பெறும் பள்ளிகளுக்கு மாற்றுப் பணி மூலமாக பணிநியமனம் செய்த பின்பும் மாவட்ட அளவில் உபரியாக உள்ள ஆசிரியர்களை அம்மாவட்டத்திற்குள் செயல்படும் அரசுப் பள்ளிகளில் உள்ள தகுதியான காலிப் பணியிடங்களுக்கு மாற்றுப் பணி மூலம் பணிபுரிய உரிய அலுவலரால் பணிநியமன ஆணை வழங்கப்படவேண்டும்.

(x) இவ்வாறு மாவட்டத்திற்குள் மாற்றுப்பணி முடிக்கப்பட்ட பின்னர், மாவட்டத்திலுள்ள தேவைக்கு அதிகமான உபரி ஆசிரியர் பட்டியல் விவரங்களை சார்ந்த இயக்குநருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதனடிப்படையில் பிற மாவட்டங்களிலுள்ள நிரப்பத் தகுந்த காலிப் பணியிடம் உள்ள உதவி பெறும் பள்ளிகளுக்கு மாற்றுப்பணி மூலமும், அரசுப் பள்ளிகளுக்கு மாற்றுப் பணி மூலமும் ஆசிரியர்களாகப் பணிபுரிய சார்ந்த இயக்ககத்தின் மூலமாக ஆணைகள் வழங்கப்பட வேண்டும்.

(xi) தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1973, தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் அவசர சட்டங்கள் 14 Bயில் பிறப்பிக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி, 1991–1992க்குப் பிறகு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப உதவி பெறும் பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டிருப்பின், அப்பணியிடங்கள் நிரந்தரமாக காலி ஏற்படும் போது நிரப்பப்படக்கூடாது. அப்பணியிடங்கள் காலாவதி ஆகிவிடும்.

(xii) அனைத்து மேலாண்மையின்கீழ் இயங்கும் பள்ளிகளின் நிர்வாகிகளால் தங்களது பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள நிரப்பத் தகுந்த காலிப் பணியிடங்களை நிரப்பும் முன்பு அம்மாவட்டத்தில் பணியாளர் நிர்ணய ஆணைப்படி கூடுதல் ஆசிரியர் எவரும் பணிபுரியவில்லை என்பதை உறுதி செய்திடல் வேண்டும்.

(xiii) உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வதால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படக்கூடாது. மேலும் புதிய பணிநியமனங்கள் ஏதும் இந்நேர்வில் மேற்கொள்ளக்கூடாது.

(xiv) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு W.A.(MD)Nos. 76, 225, 341 of 2019 , 1612, 1076, 1093, 1461, 1473 and 1531 of 2018–ன் தீர்ப்பாணை வெளியிடப்பட்ட நாளான 09.04.2019 முதல் கூட்டு மேலாண்மை / இதர மேலாண்மைகளின் கீழ் செயல்படும் பள்ளிகளில் உள்ள உபரி ஆசிரியர்களை மாற்றுப்பணி மூலமாக பணியமர்த்தும் பணி நிறைவு பெறும் வரை, அத்தனியார் பள்ளிகளில் எந்த ஒரு பணியிடத்திலும் பணிநியமனம் புதிதாகச் செய்தல் கூடாது. எந்த ஒரு புதிய ஆசிரியர் பணிநியமனத்திற்கும் ஏற்பு அளித்தல் கூடாது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.202/PS(SE)/Edu-II/2019, நாள் 21.08.2019ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
நகல்
நிதித் (கல்வி II ) துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

17/9/19